**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது. (குறள்.எண்.7)**

**பொருள்:** தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருத்தி நினைக்கின்றவர் அல்லாமல் மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

## பழனி நகராட்சி

2020–ம் ஆண்டு மார்ச் மாதம் 23–03–2020 ம் நாள். திங்கள் கிழமை காலை 11.00 மணியளவில் பழனி நகராட்சியில் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெறும்.

நகராட்சி அலுவலகம், பழனி
நாள். 23–03–2020

தனி அலுவலர்
பழனி நகராட்சி

## கூட்டப்பொருள்

**1.** பழநி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு களப்பணிகளை முன்னிட்டு 1 முதல் 33 வார்டுகளில் கொசு ஒழிப்பு பணிக்காக டெமிபாஸ், புகை போக்கி மருந்து பைரத்திரம் மற்றும் பாசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் போதியளவு இருப்பு வைத்திருக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளதன்படி, களப்பணி உதவியாளர் அவர்களால் வழங்கப்பட்ட தேவை விவரப்படி கொசு மருந்துகள் தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் (TNMSC), சென்னை அவர்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் கீழ்க்கண்ட அட்டவணையில் உள்ளபடி,

| வ. எண் | பிரிவு 1 முதல் 6 வரை தேவையான மருந்துகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிறுவனத்தின் பெயர் | மருந்தின் அளவு | 1 லி/1 கி விலை ரூ. | மொத்தம் ரூ. | GST | மொத்தம் ரூ. |
| 1 | டெமிபாஸ் (அபேட்) / 50% EC Emulsifiable | M/s. Paramount Pestcides Ltd 35/3A/3, Delhi Octroi Post, Delhi Road, Merrut-250002 Utter Pradesh | 300 லிட்டர் | 625 | 187500 | 33750 (18% GST) | 221250 |
| 2 | மாலத்தியான் / TECHNICAL MALATHION 95% | M/s. Coromandel International Limited, 1-2-10, Sardar Patel Road, Secunderabad-500003. Telangana. | 300 லிட்டர் | 369 | 110700 | 19926 (18% GST) | 130626 |
| 3 | பாசில்லஸ் துரிஞ்சியென்சிஸ் / BACILLUS THURINGIENSIS var Israelensis 5% WP Stain | M/s. Ajay Bio-Tech (India) Ltd., 3rd Floor, Netsurf - Sr.No.107, Plot No.2, Baner, Pune – 45 Maharashtra | 100 கிலோ | 1047 | 104700 | 12564 (12% GST) | 117264 |
| | | | | **Total** | **402900** | **54940** | **469140/-** |

கொசுப்புழு ஒழிப்பு மருந்து வாங்கி வழங்க மதிப்பீட்டு தொகை **ரூ.4,69,140/-**ஐ பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் கூட்டப்பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதியும் (ந.க.எண்.3786/2015/எச்2)

**2.** பழனி நகராட்சி வார்டு எண்.27—ல் கதவு எண்.41, அருள்ஜோதி வீதி சொத்துவரி விதிப்புஎண்.12579—ஐ மந்திரம்மாள் என்பவர் பெயரிலிருந்து சாதுசண்முகஅடிகளார் பெயருக்கு பெயர் மாற்றம் செய்துள்ளது தொடர்பாக ஆட்சேபனை செய்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மந்திரம்மாள் க/பெ.மாடசாமி என்பவர் தொடரப்பட்ட வழக்கு எண்.WP (MD)NO.25610/2019-ல் தொடரப்பட்டுள்ளதை, மேற்படி இவ்வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.லூர்துபால் மெளரியா என்பவர் இந்நகராட்சியின் சார்பாக ஆஜராவதற்கும் அதற்குரிய வழக்காடு கட்டணம் ரூ.15,000/— (பதினைந்தாயிரம் மட்டும்) அலுவலக பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி இவ்வழக்கின் வழக்காடு கட்டணம் ரூ.15,000/— பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம். ந.க.எண்.580/2020/அ2)

**3.**பழனி நகராட்சிக்கு சொந்தமான திண்டுக்கல் தண்ணீர் தொட்டியில் அமைந்துள்ள அறையில் பழுது பார்க்கப்பட்டு மராமத்து செய்யப்பட்டுள்ளது. அதற்கு வர்ணம் பூசாமல் உள்ளது. எனவே அதனை பயன்படுத்த வர்ணம் பூச மதிப்பீடு ரூ. 68000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1. மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**4.** பழநி நகராட்சிக்குட்பட்ட சின்னையா தெரு குடிசைப்பகுதி (Slum areas) 13 வது வார்டில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு தூர்ந்து போய்விட்டதால் அப்பகுதி மக்கள் பிற உபயோகத்திற்கு நீர் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள் எனவே பொதுமக்களின் அன்றாட தேவையினை கருத்தில் கொண்ட அப்பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு ஒன்று அமைக்க மதிப்பீடு ரூ.2,00,000/—க்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு 1.** மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2.மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து ஈடு செய்யலாம், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மேற்படி பணி செய்ய நிதிஒதுக்கீது செய்யும் பட்சத்தில் அதனை ஈடு செய்யலாம்.

**5.** நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் சுமார் 50 இடங்களில் உள்ள ஆழ்துளைக் கிணறுகளுக்கு உண்டான மின் இணைப்பு சுவிட்ச் போர்டு ஆழ்துளை கிணற்றிலிருந்து 50 மீட்டர் தூரத்திற்கு மேல் அமைந்துள்ளது. இதனால் வயர் கட்டாகி விடுகின்ற சூழ்நிலை உள்ளது. ஆழ்துளைக் கிணறு மோட்டார் மற்றும் வயர் அடிக்கடி பழுது ஏற்படும்போது கரண்ட் ஷாக் அடிக்கும் நிலை ஏற்பட்டுவிடுகிறது இதே நிலை நீடித்தால் உயிர் சேதம் ஏற்படும் நிலை உருவாகும் எனவே அதனை தவிர்க்கும் பொருட்டு வயர்களை மாற்றி ஆழ்துளைக் கிணறுக்கு அருகிலேயே மின் இணைப்பினை மாற்றி அமைத்து சுவிட்ச் போர்டு அமைக்க மதிப்பீடு ரூ.9.80 —க்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1. மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**6.** பழநி நகராட்சி, வார்டு எண் 21— காமராஜர் வீதி, மார்க்கண்டேயன் கோயில் தெரு சந்திப்பில் உளள பாலம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் குழாய் பதிப்பின் போது பாலம் உடைப்பு ஏற்பட்டு அடைப்பு ஏற்பட்டு தூர்நாற்றம்வீசுகிறது, தினசரி கழிவு நீர் அடைப்பு ஏற்படுவதால் கொசுதொல்லையும் அதிகம் உள்ளது இதனால் பொதுமக்களின் சுகாதாரம் பேனும் வகையில் உடைந்த பாலத்தை அப்புறப்படுத்தி புதிதாக பாலம் அமைக்க மதிப்பீடு ரூ.1.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு 1.** மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2.மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**7.** நகராட்சிக்குட்பட்ட மதினா நகர், திண்டுக்கல் ரோடு, இடும்பன் கோவில் ஆகிய இடங்களில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான மின் இணைப்பில் உயர்மின் அழுத்தம் காரணமாக தீ பிடித்து எரிந்துவிட்டது இனால் மூன்று மின் இணைப்புகள் பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே புதிதாக wiring செய்து மின் இணைப்பு மறுபடியும் நல்லநிலையில் இயக்க தேவைப்படும் பொருட்கள்

| | | | |
|---|---|---|---|
| 1.) | 3/20 காப்பர் வயர் | – | 3 காயில் |
| 2.) | சர்வீஸ் ரீல் | – | 4 டஜன் |
| 3.) | சர்வீஸ் வயர் கம்பி | – | 3 கிலோ |
| 4.) | டேப் ரோல் | – | 10 எண்ணிக்கை |
| 5.) | சர்வீஸ் பைப் ( G.I) | – | 1 " |

மேற்கண்ட பொருட்கள் நகராட்சியில் இருப்பில் இல்லாத காரணத்தால் புதிதாக வாங்கி பொருத்துவதற்கு மதிப்பீடு ரூ.30,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
1) மதிப்பீடு அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**8.** பழநி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் ஆதாரமான கோடைக்கால நீர்தேக்கம் புளியமரத்து செட்டில் அமைந்துள்ளது, தற்போது குடிநீர் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகிறது அப்பணியின் மதிப்பீட்டில் சுற்றுவேலியும் அமைந்துள்ளது ஆனால் விடுபட்ட் இடங்களில் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது ஏனெனில் விலங்குகள் மற்றும் விஷமதனமாக செயல்படக்கூடிய நபர்கள் உள்ளே சென்று அசுத்தம் செய்கின்ற நிலை உருவாகி உள்ளது மற்றும் ஆக்கரிமிப்பு செய்யும் நிலையும் உள்ளது அதனை தடுக்கும் பொருட்டு விடுபட்ட பகுதியில் கம்பி வேலி அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மண்டல செயற்பொறியாளர் மற்றும் TNUIFSL அவர்களின் பொறியியற் ஆலோசகர் அவர்கள் தளஆய்வின் போது மேற்படி பணியனை அவசியம் செய்ய ஆலோசனை கூறியதன் அடிப்படையில் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**9.** பழநி நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் ஆதாரமான கோடைக்கால நீர்தேக்கம் புளியமரத்து செட்டில் அமைந்துள்ளது, கோடைகால நீர்த்தேக்கத்தில் பில்டர்பெட், குளோரின் ரூம் மற்றும் உட்புற சாலை வசதிகள் இல்லாமல் சேரும் சகதியுமாக உள்ளது மழைக்காலங்களில் காவலர் அறையிலிருந்து slow sand filter அறை வரை சாலை வசதி இல்லை மேலும் மெயின் சாலையிலிருந்து குளோரின் அறை வரை சாலை வசதி இல்லை இதனால் சிலின்டர் ஏற்றி வரும் வாகனம் பெரும் சிரம்மத்திற்கு ஆலாகி வருகிறது மேலும் ஆய்வு மேற்கொள்ள அலுவலர்கள் வந்தால் நடந்து செல் வேண்டிய நிலை உள்ளது மழைக்காலங்களில் பெரும் சிரமத்திற்கு ஆளாக நேரிடுகிறது எனவே மேற்படி சாலையினை அமைக்க மதிப்பீடு ரூ.24.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**10.** நகராட்சிக்கு சொந்தமான திண்டுக்கல் ரோடு மேல்நிலைத் தண்ணீர்தொட்டி இரண்டு உள்ளது, இத்தொட்டிகள் சுமார் 30 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டதாகும். இதனால் தொட்டியில் நீர் மேல் எறுவதற்கு ஏதுவாக இல்லை, படிகட்டுகள் சிதலமடைந்து மோசமான நிலையில் உள்ளது. மேலும் தொட்டியின் மேல் கூறை உட்புறம் ஆங்காங்கே பெயர்ந்து வருகின்றது இரண்டு தொட்டிகளுக்கும் மராமத்து பணி நடைபெறவில்லை எனவே இரண்டு தொட்டிகளுக்கும் புதிய Sprial Lador- ல் மராமத்து மற்றும் மேற்கூறை அமைத்தல் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள நீர்பகுப்பாய்வு அலுவலரால் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்படி பணி செய்ய மதிப்பீடு ரூ.9.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**11.** பழநி நீரேற்று நிலையமான பாலாறு சுத்திகரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள Gas clorine set –ல் clorine –னால் பைப் –ல் அரிப்பு ஏற்பட்டு Valve, Gas Filter, pressure gauge, Automatic vacum Regulator, Flow Control valve, cabinet, Glass tube, rota meter fitting, check value, injector, Ejector, pressure Reducing valve set, Equipment Frame மற்றும் சில பொருட்களிலும் அரிப்பு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது எனவே அவசர அவசியம் கருதி மேற்காணும் பொருட்களை மாற்றி நல்ல முறையில் பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.1,80,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
1) குடிநீரின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**12.** பழநி நகராட்சி 33 வார்டுகளை கொண்டது, அனைத்து வார்டுகளிலும் துப்புறவு பணி நடைபெற தூய்மை இந்தியா திட்டம் 2018–19 திடக்கழிவு மேலாண்மை பணியில் முதன்மை சேகரிப்பிற்கான 20 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (Battery Operated Vehicle) விநியோகம் செய்யும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின்செயல்முறைக் கடிதம் ந.க.எண்.22866/2018/பி3, நாள்.23/08/2018–ன்படி நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, 14.12.2018 நாளிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரி Battery Operated Vehicle வாகனம் வாங்கப்பட்டது, ஓராண்டு வரை விநியோகஸ்தர் பராமரிப்பு காலம் முடிவடைந்து விட்டது. தொடர்ந்து பராமரிப்பு பணி மேற்கொண்டு வாகங்களை இயக்க வேண்டி உள்ளது,
எனவே BOV வாகனம் 20 + கொசுமருந்து அடிக்கும் வாகனம் 1 மொத்தம் 21 வாகனங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தூய்மைப் பணி என்பதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) தனி அலுவலர் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரியதனையும் அனுமதிக்கலாம்.

**13.** பழநி நகராட்சி அலுவலகத்தில் இயங்கி வரும் கணினிகள், பிரிண்டர்களில் அவ்வப்போது பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள அலுவலக பணிகளின் அவசர அவசியம் கருதி அனைத்து பிரிவுகளிலும் உள்ள கணினிகளுக்கும் நாளது தேதி வரை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.2.75 இலட்சத்திற்கு கீழ்க்கண்ட பணிக்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கணினி பிரிவு | 2 |
| | பொதுப்பிரிவு | 5 |
| | ஆணையர் அறை | 1 |
| | வசூல் மையம் | 3 |
| | பொறியர் பிரிவு | 4 |
| | பொறியாளர் அறை | 1 |
| | தணிக்கை பிரிவு | 2 |
| | வருவாய் பிரிவு | 4 |
| | சுகாதார பிரிவு | 2 |
| | நகரமைப்பு பிரிவு | 3 |
| | மகப்பேறு உதவியாளர் | 1 |
| | தேர்தல் பிரிவு | 1 |
| | **கணினி மொத்தம்** | **29** |
| 2 | **பிரிண்டர்கள்** | |
| | HP Laser Jet M1005 MF | 8 |
| | Dot Matrix Printer | 3 |
| | HP Leser Jet 1008 | 5 |
| | HP Laser Jet 1020 | 1 |
| | HP Laser Jet M202dw | 1 |
| | HP Laser Jet 262 | 2 |
| | **பிரிண்டர்கள் மொத்தம்** | **20** |

**அலுவலகக் குறிப்பு :**

1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.4914/2016/ந1

**14.** நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலைப்பள்ளிக்கு செல்கின்ற சாலை, உழவர் சந்தைக்கு முன்புறமாக உள்ள சாலை மற்றும் நகராட்சி குடியிருப்பு ஆகிய மூன்றும் அமைந்துள்ளதால் மக்களின் நடமாட்டத்தை கண்கானிக்க CCTV கேமரா வைக்க அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**15.** உழவர் சந்தை சாலையில் Tpo quarters சுமார் 50 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டு யாரும் குடியேறாமல் இருந்துள்ளதை இந்நகர்மன்றம் 188, நாள்.28/07/2017 –அன்று நிர்வாக அனுமதி வழங்கி அதனை மராமத்துப் பணிமேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணியும் நடைபெறும் நிலையில் மராமத்துப் பணி பார்க்கும் போது நிறைய மாற்றம் செய்ய வேண்டிய நிலை உள்ளது எனவே திருத்திய புதிய மதிப்பீடு ரூ.5,00,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது புதிய மதிப்பீட்டிற்கும், கூடுதல் இனங்களுக்கும் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> கட்டிடத்தின் தன்மையை கருத்தில் கொண்டு திருத்திய மதிப்பீட்டிற்கும், புதிய இனங்களுக்கும் அனுமதிக்கலாம்.

**16.** பழநி நகராட்சிக்கு சொந்தமான உழவர் சந்தை அருகில் உள்ள பூங்கா மக்களின் பயன்பாட்டில் உள்ளது சிறுவர்கள், முதியவர்கள் மற்றும் பெண்கள் உள்ளிட்டோர் வருகிறார்கள் தற்சமயம் பூங்காவில் 3 பேஸ் மின் இணைப்பு பழுதடைந்துள்ளது. மேலும் UG Cable –களும் பழுதடைந்துள்ளது இதனால் மின் தடையால் மோட்டார் இயக்க முடியாமல் செடி கொடிகளுக்கு பராமரிப்பு மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மின் இணைப்பினை சரிசெய்யவும், மின் தடையால் பழுதான மின்மோட்டார் சரி செய்யவும் மதிப்பீடு ரூ.2.25 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**17.** நகராட்சிக்கு சொந்தமான MHO, TPO, குடியிருப்பு கட்டிடம் கட்டி 50 வருடங்களுக்கு மேல் ஆனதால் மராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியமாக இரு குடியிருப்பிலும், மேல் தளம் Surki, Tiles, தரைதளத்தில் Paver Block, புதிதாக செட், கலர் வாஷ், நச்சுத்தொட்டி, எலக்டிரிக்கல்ஸ் arrangements, கிரவல், வாஸ்பேசின் மற்றும் குடிநீர் arrangements அமைக்கவும், சமையல் அறையினை நவீன காலத்திற்கு ஏற்றாற்போல் modular Kitchen அமைக்கவும், UPS, Pannel Borard, AC, Water Purifier, கொசு வலை, Window Screen Screen மற்றும் Furniture arrangements வயரிங் பணிகள் போன்ற பணிகள் 2 குடியிருப்புகளுக்கும் புதிதாக அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் மதிப்பீடு ரூ.17.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**18.** நகராட்சிக்கு சொந்தமான கோடைகால நீரிதேக்கத்தில் இருந்து பழநி அடிவாரம் தொட்டிக்கு வரும் பிரதான குழாய் 450 mm RCC பைப்களில் அவ்வப்போது பழுது ஏற்பட்டு நகர் மக்களுக்கு விநியோகம் செய்யமுடியாத சூழ்நிலை உருவாகிறது. மேலும் பகிர்மான குழாய்கள் நகர் பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், 250mm, 300mm RUD, Shutter, cheknut ஆகியவை அவ்வப்போது பழுது நீக்கம் செய்யவும் சுலீஸ் வால்வுகளை சரிசெய்யவும், போதுமான பொருட்கள் நகராட்சி இருப்பில் இல்லாததால் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்யவும் வால்வுகளை சரிசெய்யவும் அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் மதிப்பீடு ரூ.2.00 –இலட்சத்துக்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**19.**பழநி நகராட்சிக்கு சொந்தமான அடிவாரம் நகராட்சி பள்ளியில் மராமத்து பணி நடைபெற்று பல வருடங்களாகிவிட்டது போதிய மராமத்துப் பணி மேற்கொள்ளாததால் மழைக்காலங்களில் பள்ளியின் மேற்கூறையில் தண்ணீர் தேங்கி சுருக்கி பிரஸ்டு டைல்ஸ், வயர்க., உட்புறப் பூச்சு, தரைத்தளம் ஆகியவை பெயர்ந்து மழைக்காலங்களில் அவற்றின் ஓரத்தில் மழைநீர் வழிந்தோடுகிறது இதனால் உட்புற பூச்சு அவ்வப்போது கீழே விழுகின்றது இதனால் மழைக்காலங்களில் கல்வி கற்க முடியாத சூழ்நிலை நிலவி வருகிறது எனவே மராமத்துப் பணி பார்க்கவேண்டிய சூழ்நிலை உள்ளது எனவே மதிப்பீடு ரூ.17.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**20.** இந்நகரம் கோவில் ஸ்தலமாக உள்ளதால் நாள்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்துசெல்கின்றனர், இந்நிலையில் வ.ஊ.சி புதிய பேருந்துநிலையத்தில் உள்ள நடைபாதை மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி நடைபாதை சரிசெய்ய அவசர அவசியம் கருதி இரும்பு ஆங்கில் பதித்தும், கான்கிரிட் அமைத்து மற்றும் பேருந்துநிலையத்தின் மேற்கூரையில் சுருக்கி டைல்ஸ் சேதமடைந்ததை அப்புறப்படுத்தி புதிய டைல்ஸ் அமைக்கும் பணிக்கு ரூ.12.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2)செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**21.** குளத்து பைப்பாஸ் சாலையில் பஸ் நிலைய முகப்பில் மேற்கு ஓரத்தில் பிரதான குழாய் AC மெயின் உள்ளது அது மிகவும் பழமையானது அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு கசிவு ஆகின்றது இதனால் அடிக்கடி பழுது நீக்கம் செய்ய வேண்டிய நிலை உள்ளது எனவே சுமார் 22 மீட்டர் நீளத்திற்கு AC To DI ஆகவும், திண்டுக்கல் – பழநி சலையில் உள்ள AC மெயின்களை DI ஆக மாற்ற சுமார் 250 mm 10 எண்ணம், 200 mm 5 எண்ணம் மேலும் வால்வு, Air valve, Tee, Bord, மேலும் தேவையான பொருட்கள் வாங்குவதற்கு ரூ.7,50,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகறிது.

**அலுவலகக்குறிப்பு**
1) குடிநீரின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**22.** இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் கோடைகாலநீர் தேக்கம் (SS Tank) பாலாறு தலைமை நீர் ஏற்று நிலையங்களில் நீர் ஆதாரங்களில் இருந்தும் குடிநீர் எடுக்கப்பட்டு பொது மக்களுக்கு நகரில் உள்ள ஏழு மேல்நிலைத்தொட்டிகளில் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பாலாறு நீரேற்று நிலையத்தில் குடிநீர் பணியாளர்கள் விளக்கு எரியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள் எனவே குடிநீர் பணியாளர்களின் பணிச்சுமையின் நலன்கருதி 60 வாட்ஸ் LED– 10 No, டியூப் லைட் 20 வாட்ஸ் 40 எண்ணம் புதிதாக வாங்குவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**
1) அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**23.** நகராட்சிக்கு சொந்தமான அடிவார மேல்நிலைத் தொட்டியில் மேற்புறம் உடைந்த Manhole cover- களை எடுத்து புதிதாக Manhole அமைக்கவும், திண்டுக்கல் ரோடு மேல்நிலைத் தொட்டி, சிவகிரிப்பட்டி மேல்நிலைத் தொட்டி மற்ற மேல்நிலைத் தொட்டிகள் ஒருங்கினைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள வடிகாலில் உள்ள manhole அமைக்கவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும் மதிப்பீடு ரூ.1,00,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.

**24.** நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 33 வார்டுகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும் பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுதுநீக்கம் செய்ய தேவையான பொருட்களை வாங்கி பழுது நீக்கம் செய்ய மதிப்பீடு ரூ.2,50,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**
1) அவசர அவசியம் கருதி உள்ளுர் கடைகளில் பொருட்களை வாங்கி பழுது நீக்கம் செய்யலாம்.
2) மதிப்பீட்டினை அனுமதிக்கலாம் மேற்படி செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**25.** நகராட்சிக்கு சொந்தமான ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் முகப்பில் அமைந்துள்ள கழிவறை மிகவும் மோசமாக உள்ளது அதனை சரி செய்ய தலைமையாசிரியர் மனுகொடுத்துள்ளார் எனவே மேற்படி கழிவறையினை பழுது நீக்கம் செய்யவும், பைபாஸ் சாலையில் அமைந்துள்ள கழிவறையினையும் சீர் செய்யவும் பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வன்னம் உள்ளது எனவே அதனையும் சீர் செய்யவும் மதிப்பீடு ரூ.5,40,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** கழிவறையினை பயன்படுத்தும் வன்னம் பழுது நீக்கம் செய்ய மதிப்பீட்டினை அனுமதிக்கலாம் செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**26.** பழநி நகராட்சிக்குட்பட்ட 30 வது வார்டு திலகர் வீதியில் உள்ள பழுதான மினிபவர் பம்பினை மராமத்து பணி மேற்கொள்ளவும், குண்டும் குழியுமாக உள்ள சாலையினை சுமார் 13 மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் சாலையாக செப்பணிடவும் பொதுமக்களின் கோரிக்கயைினை ஏற்று மதிப்பீடு ரூ.1,30,000/—க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**
1) அனுமதிக்கலாம்
2) செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**27.** பழநி நகராட்சி பொது நிதி 2017—2018—ன்கீழ் ரூ.3.00 இலட்சத்தில் தாலுகா அலுவலக வளாகத்திலுள்ள நகராட்சி மேல்நிலைத் தொட்டி வளாகத்திற்குள் காவலர்களுக்கு தங்கும் அறை, கழிப்பறை வசதி மற்றும் மின்வசதி அமைக்கும் பணிக்கு தனி அலுவலர் கூட்டப்பொருள் எண்.260, நாள்.10/10/2017—ல் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி 27/09/2017—ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு 11/10/2017—ல் வழங்கி 30 நாட்களில் முடிக்க தெரிவிக்கப்பட்டு இறுதி அறிவிப்பு 21/06/2019—ல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வரை தொடங்கப்படவில்லை எனவே இப்பணிக்கு வேலை உத்திரவு வழங்கி இரண்டுவருடகாலத்திற்கு மேற்பட்டுவிட்டதால் இப்பணியினை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மேற்காணும் பணியின் ஒப்பந்ததாரர் திரு.S.சரவணன், என்பவரின் முன்வைப்புத் தொகை மற்றும் நிறுத்திவைப்புத் தொகை ஆகியவற்றை பறிமுதல் செய்து நகராட்சிக் கணக்கில் சேர்க்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1) வேலை உத்திரவை ரத்து செய்யலாம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
2) ஒப்பந்ததாரர் இப்பணிக்காக செலுத்திய முன்வைப்புத் தொகை, நிறுத்தி வைப்புத் தொகை ஆகியவை பறிமுதல் செய்யலாம். பறிமுதல் செய்து நகராட்சி கணக்கில் வரவுவைக்க அனுமதிக்கலாம்.

**28.** பழநி நகருக்குட்பட்ட 14 வது வார்டில் உள்ள பொன்காளியம்மன் கோவில் தெருவில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து உள்ளதை சரி செய்ய ரூ.50,000/—க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மதிப்பீட்டுத் தொகைக்கு உரிய நிர்வாக அனுமதிக்கும் தொகையினை பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்வதற்கும் கூட்டத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**
செலவினத் தொகையினை பொதுநிதியில் மேற்க்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.416/2020/இ1).

**29.** பழநி நகராட்சிக்குட்பட்ட பொறியர் பிரிவு குடிநீர் வாகன எண். TN 57 Z 3464—க்கு மின்கலன் (Battery) 2017—ம் ஆண்டு வாங்கி இதுவரை பயன்பாட்டில் இருந்து வருகிறது தற்போது மின்கலன் பழுதடைந்துவிட்டதால் புதிய மின்கலன் அவசியம் வாங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது மேலும் குடிநீர் வாகனம் என்பதால் மக்களின் நலன் கருதி உடன் மின்கலன் வாங்க உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.9,500/—க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள் மன்ற அனுமதிக்கலாம். (ந.க.எண்.1121/2020/இ3)

**30.** பழநி நகராட்சிக்கு சொந்தமான பெரியப்பாநகர் உரக்கிடங்கில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் தினசரி சேகரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் மக்காத குப்பைகள் என்று தரம் பிரிக்கப்பட்டு மக்கும் குப்பைகள் அரைக்க (Tromil) இயந்திரம் செயல்பட்டு வந்தது மின்சார ஏற்ற இறக்கம் காரணமாக வேகமாக சுழன்று செயின் பழுதடைந்த காரணத்தினால் பெல்ட் கட்டாகி அதில் உள்ள பல்சக்கர சாப்ட் வலைந்துபோனது மேலும் இரண்டு பக்கம் உள்ள பேரிங்பழுதடைந்து உடைந்துவிட்டது எனவே மேல்பக்கம் உள்ள பல்சக்ர சாப்ட் மற்றும் பேரிங் யூனிட் மாற்ற வேண்டி உள்ளது செயின் பழுதுகள் சரி செய்து மாற்றி அமைக்க வேண்டி உள்ளது அவசர அவசியம் கருதி உடனடியாக நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15—ன் கீழ் உள்ளுர் பணிமனைகளில் விலை விகிதம் பெற்று குறைந்த விலைப்புள்ளி கெடுத்த விஜய் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், பழநி நிறுவனத்தின் மூலம் பழுதுகளை சரி செய்து முடிக்கப்பட்டது. அதற்கான பட்டியல் பொதுநிதியில் ரூ.49500/—பட்டியல் வழங்கப்பட்டது, மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**31.** பழநி நகராட்சிக்குட்பட்ட இட்டேரி சாலையில் உள்ள கம்பங்களில் மின் விளக்கு இல்லாமல் உள்ளது தற்சமயம் திருவிழா காலமாக இருப்பதால் கூட்டமாக பக்தர்கள் வருவதால் சில சமூக விரோத செயல்கள் இருளில் நடக்க வாய்ப்பு உள்ளதால் அதனை தடுக்கும் பொருட்டு விளக்கு அமைக்க கோறிக்கை விடுத்துள்ளார்கள் எனவே விளக்கு (100 வாட்ஸ்) சுமார் 25 No அமைக்க மதிப்பீடு ரூ.3,20,000/– க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) பொதுமக்களின் நலன் கருதி விளக்கு அமைக்க மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**32.** பழநி நகராட்சிக்கு சொந்தமான புதிய உரக்கிடங்கில் அமைந்துள்ள இயந்திரங்களை இயக்க போதுமான cable கூடுதலாக அமைக்க வேண்டி உள்ளது, எனவே புதிதாக 240 SQm 4/2 core cable சுமார் 260 m நீளத்திற்கு தேவைப்படுவதால் அதனை வாங்கி பயன்படுத்துவதற்கு மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**33.** பழநி நகருக்கு வரி இனங்கள் அனைத்தும் பல கோடி நிலுவையாக இருப்பதால் வரி வசூல் பணியினை தீவிரப்படுத்த பொதுமக்கள் அறியும் வகையில் ஆட்டோ விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கு ரூ.2500/ செலவு ஏற்படுகிறது. எனவே இந்நகராட்சியின் மினி ஆட்டோ மூலம் விளம்பரம் செய்து செலவுத் தொகையினை குறைக்கும் வகையில் புதியதாக நகராட்சிக்கு சொந்தமாக ஒரு ஆம்பிளிபையர், இரண்டு உறாரன்கள், மைக் மற்றும் அதற்குரிய உபகரணங்கள் புதியதாக வாங்க ரூ.75000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டுத் தொகைக்கு உரிய நிர்வாக அனுமதிக்கும் தொகையினை பொது நிதியில் செலவினம் மேற்க்கொள்வதற்கும் கூட்டத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

செலவினத் தொகையினை பொதுநிதியில் மேற்க்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.3431/2020/இ1)

**34.** நகராட்சிக்குட்பட்ட அஜாஸ் ராவுத்தர் தெருவில் அமைந்துள்ள சத்துணவு கூடத்தில் தற்போது மின்சாரம் இல்லை அதனால் குழந்தைகளும், அமைப்பாளர்களும் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள் எனவே மின்சாரத்தை சீர் செய்யும் பொருட்டு மின் வயர்களை போஸ்டிலிருந்து புதிதாக அமைக்கவும், வயர்களை சரி செய்து விநியோக திறன் சிர் செய்ய மதிப்பீடு ரூ.15,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**35.** நகராட்சிக்குட்பட்ட அண்ணாநகர் பகுதி, லட்சுமிபுரம் மற்றும் குமரன் தெரு ஆகிய பகுதியில் உள்ள வடிகால் சிதிலமமைந்து உடைந்தும் சாலைப்பகுதியிலிருந்து இதனால் வடிகாலில் நீர் செல்லாமல் தேங்கி துற்நாற்றம் வீசுகிறது எனவே அதனை தடுக்கும் பொருட்டு வடிகால் மற்றும் பாலம் ஒன்று அமைக்க மதிப்பீடு ரூ.2,93,000/–க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**36.** நகராட்சிக்குட்பட்ட ஆண்டவன் பூங்கா சாலையில் உள்ள பழமையான பாலம் சிதிலமடைந்து உடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது வாகனங்கள் கடந்து செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது எனவே புதிய பாலம் ஒன்று அமைக்க மதிப்பீடு ரூ.1,90,000/–க்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.

**37.** உரக்கிடங்கில் கயவர்கள் மற்றும் பணியாளர்களை கண்காணிக்க CCTV கேமரா பொருத்தப்பட்டு தற்போது இயங்கிவருகிறது மேலும் கூடுதலாக 8 இடங்களில் 8 கேமரா பொருத்த அறிவுறுத்தப்பட்டது அதன் அடிப்படையில் ரூ.1,85,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது எனவே அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__

1) மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**38.** பழனி நகராட்சிக்கு சொந்தமான சண்முகபுரம் நடுநிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை உள்ளது இப்பள்ளியில் சுமார் 232 மாணவர்களுக்கு பாடம் பயின்று வருகிறார்கள். 15 வகுப்பறையினை நவீன காலத்திற்கு ஏற்றாற் போல் வகுப்பறையினை டிஜிட்டல் முறையில் கற்க நடவடிக்கை எடுக்கவும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக தரம் உயர்த்தவும் (Smart Class) அமைக்க அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் மதிப்பீடு ரூ.23.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__

1. மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவீனத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**39.** பழனி நகராட்சிக்கு சொந்தமான அடிவாரம் நடுநிலைப் பள்ளியில் சுமார் 220 மாணவர்களோடு, சுமார் 10 வகுப்பறைகள் உள்ளது அதில் படிப்பகம் 1 அறை போக மீதமுள்ள 9 அறைகளில் பாடம் கற்று வருகிறார்கள். 9 வகுப்பறையில் சுமார் 4 வகுப்பறையினை நவீன காலத்திற்கு ஏற்றாற் போல் வகுப்பறையினை டிஜிட்டல் முறையில் கற்க நடவடிக்கை எடுக்கவும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக தரம் உயர்த்தவும் (Smart Class) அமைக்க அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் மதிப்பீடு ரூ.22.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

__அலுவலகக்குறிப்பு__

1. மதிப்பீட்டினைஅனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவீனத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**40.** நகராட்சிக்கு சம்மந்தப்பட்ட வாசக சாலைகளுக்கு நவம்பர் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை உபயோகத்தப்பட்ட நாளிதழ்களுக்கு சந்தாத் தொகைக்கான பட்டியல்கள் கீழ்க்கண்டவாறு தொகை ரூ.45,180/– வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | நாளிதழ்கள் | வாசக சாலை விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | C.சிவக்குமார் | தினத்தந்தி | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 3,175/– |
| 2. | A.சிவசுப்பிரமணியன் | (பாதுகாவலர்) | அங்கனத் தேவர் வாசக சாலை | 800/– |
| 3. | கார்த்திகேயன் | (பாதுகாவலர்) | திருவள்ளுவர் வாசக சாலை | 800/– |
| 4. | A.சக்திவேல் | தினமலர் | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 4,275/– |
| 5. | M.அய்யானரப்பன் | தீக்கதிர் | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 3,200/– |
| 6. | S.சரவண ராஜன் | தினகரன் | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 3,275/– |
| 7. | R.முருகானந்தம் | தினமணி, The Hindu, The Indian Express, மாலைமலர் | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 15,230/– |
| 8. | K.முகமது கனி | முரசொலி | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 3,000/– |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | K.முகமது கனி | தினபூமி | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 1,800/– |
| 10. | K.முகமது கனி | மாலைமுரசு | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 3,025/– |
| 11. | K.முகமது கனி | டாக்டர் நமது M.G.R | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 2,400/– |
| 12. | K.முகமது கனி | மக்கள் குரள் | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 2,400/– |
| 13. | K.முகமது கனி | மதுரை மணி | திருவள்ளுவர்,ஆசாத், ஜீவா, கலைஞர் அங்கணத்தேவர் | 1,800/– |
| | | | **மொத்தம் ரூ.** | **45,180/–** |

எனவே மேற்படி நாளிதழ்கள் வழங்கப்படவேண்டிய தொகை ரூ.45,180/– பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**41.** இந்நகராட்சியில் 2007–ம் ஆண்டு முதல் 2016–ம் ஆண்டு வரையிலான காலங்களுக்கு, வெவ்வேறு வழக்குகள் மற்றும் செலுத்தப்பட வேண்டிய சேவைவரிகள் தொடர்பாக மத்திய சேவைவரி அலுவலகம், கண்காணிப்பாளர் திண்டுக்கல் அவர்களது கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது கடிதம் எண்.3651/2019/அ2 நாள்.28–11–2019–ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறும், சேவைவரிக்காக செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகைகளை நீதி தீர்ப்பாயம்–சப்கா விஸ்வாஸ் திட்டம்–2019 (SABKA VISHWAS SCHEME-2019 Legacy Dispute Resolution) திட்டத்தின் கீழ் 2013–2014–ம் ஆண்டிற்கு ரூ.5,33,935.20/–க்கும், 2015–2016 –ம் ஆண்டிற்கு ரூ.3,04,320.80/–க்கும், தனித்தனியாக காசோலை வழங்குவதற்கான செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (496/2016/பி4)

**42.** இந்நகராட்சியில் 2007–ம் ஆண்டு முதல் 2016–ம் ஆண்டு வரை, வெவ்வேறு வழக்குகள் மற்றும் சேவைவரிகள் செலுத்தப்படுவது சம்மந்தமாக, 2007 முதல் 2012–ம் ஆண்டு வரையிலும், மற்றும் 2013–2014, 2014–2015, 2015–2016, 2016–2017 ஆகிய ஆண்டுகளுக்குரிய சேவைவரி கட்டண விபரங்களை Online-ல் பதிவேற்றம் செய்தமைக்கான கட்டணம் ரூ.43500/–ஐ வழங்கவும், EPF (தொழிலாளர் சேமநலநிதி) ஆணையத்தின் உத்திரவின் படி, தொழிலாளர் அம்மா உணவகம் பணியாளர்களது 2017–ம் ஆண்டு முதல் 2019 மே மாதம் முடிய EPF- Online பதிவேற்றம் செய்தமைக்குரிய கட்டணம் ரூ.24500/–ஐ கட்டணமாக Alayam Associate Trichy-க்கு வழங்கலாம்.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (496/2016/பி4)

**43.** இந்நகராட்சியில் பல்வேறு பணிகளில் திரு.C.கணேசன், ஒப்பந்ததாரர் வேலைகள் செய்து வேலைப்பட்டியலில் 5% பிடித்தம் செய்யப்பட்ட தொகையை வழங்கக் கோரி திரு.C.கணேசன், ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி, திரு.C.கணேசன், ஒப்பந்ததாரரது வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள், அளவுப் புத்தகம் மற்றும் கோப்புகளின் அடிப்படையில் பொறியியர் பிரிவில் மற்றும் தணிக்கைப் பிரிவில் தொகை வழங்க சிபாரிசு செய்துள்ளார்கள். மேலும், மேற்படி தொகை காலங்கடந்த வைப்புத் தொகையில் உள்ளது. எனவே, கீழ்க்கண்டவாறு தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பதிவேடு | வருடம் | பக்கம் எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2019–2020 ஆம் வருட நிலுவைப் பதிவேடு தொகுதி I | 16–17 | 78 | 24300 |
| 2 | 2019–2020 ஆம் வருட நிலுவைப் பதிவேடு தொகுதி I | 16–17 | 78 | 13244 |
| 3 | 2019–2020 ஆம் வருட நிலுவைப் பதிவேடு தொகுதி I | 14–15 | 25 | 6300 |
| 4 | 2019–2020 ஆம் வருட நிலுவைப் பதிவேடு | 16–17 | 83 | 4375 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 2019–2020 ஆம் வருட நிலுவைப் பதிவேடு தொகுதி I | 14–15 | 26 | 650 |
| 6 | 2019–2020 ஆம் வருட நிலுவைப் பதிவேடு தொகுதி I | 14–15 | 22 | 650 |
| மொத்தம் | | | | 49519 |

**அலுவலக் குறிப்பு:**

1. தணிக்கை அறிக்கையின்படி பிடித்தம் போக மீதி தொகையை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதி (RF Deposit) செலவினம் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**44.** பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு உட்பட்ட டிப்பர் லாரி-4, காம்பேக்டர் லாரி-2, கழிவுநீர் வாகனம்-1, JCP வாகனம்-2, ABC வாகனம்–1 ஆகிய வாகனங்களுக்கு 2020-2021-ம் ஆண்டிற்கான சாலை வரி, பசுமை வரி மற்றும் காப்பீட்டு தொகை செலுத்த வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| சாலை வரி, பசுமை வரி உத்தேச தொகை | ரூ. 40,000/– |
| காப்பீட்டுக்கான உத்தேச தொகை | ரூ.2,25,000/– |
| மொத்த தொகை | ரூ.2,65,000/– |

ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும் பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களுக்கு காப்பீடு, சாலை வரி, பசுமை வரி ஆகியவைகள் செலுத்தி புதுப்பிக்க தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1095/2016/எச்2)

**45.** தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பழநி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி, 2018-2019–ம் வருடத்திற்கான முதல் கட்ட குப்பைகள் சேகரிப்பு பணிகளுக்காக 37 BOV வாகனங்களும் 7 LCV வாகனங்களும் வாங்கப்பட்டு 26-03-2019 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்காணும் வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் காரணமாக குப்பை சேகரிக்கும் பணிகள் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, பொது சுகாதாரப்பணிகளில் அவசர அவசியம் கருதி மேற்காணும் வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுகளை சரிசெய்யவும், பராமரிப்பு மேற்கொள்ளவும் அதற்காக உதிரி பாகங்கள் வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,00,000/–ஐ (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்ய தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

பொது சுகாதாரம் அவசரம் அவசியம் கருதி கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2515/2019/எச்2)

**46.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டம் கடிதம் ந.க.எண்.5434/2020/J1, நாள்.09-03-2020 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் நாள்.15-03-2020-ன் படி, நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்க்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான கைதெளிப்பான், முககவசம், கையுறை, கம்பூட், முழு உடல் கவசம், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் ஆகியவைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்கோ சர்வீஸ், திருச்சி என்ற நிறுவனத்தின் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–ஐ (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியம் முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் அவசர அவசியம் முன்னிட்டும், உலக சுகாதார நிறுவனம், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் அறிவுறுத்தியதன் பேரில் உடனடியாக காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதினை கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1253/2020/எச்2)

**47.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டம் கடிதம் ந.க.எண்.5434/2020/J1, நாள்.09-03-2020 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் நாள்.15-03-2020-ன்படி, நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் உடனடியாக மேற்க்கொள்ள அறிவுறுத்தியுள்ளார்கள். கொரோனா வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான கிருமிநாசினியான பிளீச்சிங் பவுடர் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான D.D.673, பழநி வட்டார வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம், பழநி என்ற நிறுவனத்தின் மூலம் நேரடியாக பெற்றுக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/—ஐ (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) பொது நிதியிலிருந்து செலவு செய்யவும், பொது சுகாதார அவசர அவசியம் முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** பொது சுகாதாரம் அவசர அவசியம் முன்னிட்டும், உலக சுகாதார நிறுவனம், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் அறிவுறுத்தியதன் பேரில் உடனடியாக காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதினை கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1253/2020/எச்2)

**48.** பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மலேரியா பிரிவு பணியாளர்கள், தூய்மை இந்தியா திட்டம் மேற்பார்வையாளர்கள், பரப்புரையாளர்கள் மற்றும் தற்காலிக கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களின் பணிகளை மேற்பார்வையிடவும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டு பகுதிகளில் பணி விபரம் அறிதல் மற்றும் பணிபுரியும் நேரம் வருகைப்பதிவேடு போன்றவைகளை எளிமையாக கண்காணித்திட (DBC Monitoring System) பொருத்திட தனி அலுவலர் அவர்கள் உத்தரவின் கீழ், 05-03-2020-ம் தேதியன்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| S. No | ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. JO INFOCOM, 204, கிழக்கு தெரு, அண்ணா நகர், மதுரை | 3,96,480/- |
| 2 | THIRAVIYAM INFO TECH 14/1, நபிநாயகம் தெரு, பீபீ குளம், மதுரை | 4,25,280/- |

மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வ.எண்.1-ல் கண்டுள்ள ஒ7ப்பந்ததாரர் M/s.JO INFOCOM, அண்ணா நகர், மதுரை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.950/2020/எச்1)

**49.** பழநி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் வருவாய் பிரிவு பணிகளை மேற்பார்வை செய்வதற்கு ஏதுவாக வருவாய் உதவியாளர்கள், களப்பணி உதவியாளர் மற்றும் துப்புரவு பணிமேற்பார்வையாளர்களுக்கு, அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டு பகுதிகளில் பணி விபரம் அறிதல் மற்றும் பணிபுரியும் நேரம் வருகைப்பதிவேடு போன்றவைகளை எளிமையாக கண்காணித்திட (Chargable GPS Device) பொருத்திட தனி அலுவலர் அவர்கள் உத்தரவின் கீழ், 05-03-2020-ம் தேதியன்று கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| S. No | ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. JO INFOCOM, 204, கிழக்கு தெரு, அண்ணா நகர்,மதுரை | 2,47,800/- |
| 2 | THIRAVIYAM INFO TECH 14/1, நபிநாயகம் தெரு, பீபீ குளம், மதுரை | 2,60,190/- |

மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள வ.எண்.1-ல் கண்டுள்ள ஒப்பந்ததாரர் M/s.JO INFOCOM, அண்ணா நகர், மதுரை என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் வைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.950/2020/எச்1)

**50.** பழநி நகராட்சி பொது சுகாதார வாகனங்களுக்கு தகுதிச்சான்று புதுப்பிக்க வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்தி சான்று வழங்கினால் மட்டும் தகுதி சான்று புதுபிக்க இயலும் என மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பழநி அவர்கள் தெரிவித்து கொண்டதின் பேரில் பொது சுகாதாரம் அவசர அவசியத்தினை முன்னிட்டு பழநி நகரம் கோவில் நகரம் என்பதால் வாகனங்களை உடனடியாக தகுதிசான்று புதுபிக்க வேண்டி கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| S. No | விலைப்புள்ளி வழங்கிய நிறுவனம் விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | பழநி வட்டார வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம், லிட், D.D.673, திண்டுக்கல் ரோடு, பழநி. | 8,060/- |
| 2 | ரகுமந்த் என்டர்பிரைஸ், 91, காந்தி ரோடு, பழநி. | 8,400/- |

மேற்கண்டுள்ளவாறு பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வ.எண்.1-ல் கண்டுள்ள பழநி வட்டார வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு மையம், லிட், D.D.673, திண்டுக்கல் ரோடு, பழநி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ஒரு வாகனத்திற்கு ரூ.8060/- வீதம் 7 வாகனங்களுக்கு (7x 8060 = 56,420/-) ரூ.56,420/- (ரூபாய் ஐம்பத்து ஆறாயிரத்து நானூற்று இருபது மட்டும்) பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் கூட்டத்தில் பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> பொது சுகாதார அவசர அவசியத்தினை முன்னிட்டு விலைப்புள்ளி பெற்று பணி உத்தரவு வழங்கி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதினை கூட்டப்பொருள் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4870/2019/எச்2)

**நகராட்சி அலுவலகம், பழனி**
**நாள். 23–03–2020**

**தனி அலுவலர்**
**பழனி நகராட்சி**